நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கித்தார் மீன்!

வானத்தில் கூட்டம், கூட்டமாக பறவைகள் பறந்து செல்வதைப் போல கடலுக்குள் ஜாலியாக சுற்றித் திரிபவையே கித்தார் மீன்கள். பார்ப்பதற்குக் கித்தார் இசைக்கருவி போலவே தோற்றம் இருப்பதால் இதனை கித்தார் மீன்கள் என்கிறார்களாம். இதன் சிறப்புகள் குறித்து ராமநாதபுரத்தைச் சேர்ந்த கடல் உயிரியலாளர் ர.செந்தில்குமார் கூறியதாவது..

''ரைனோபாட்டிடே என்ற விலங்கியல் பெயரைக் கொண்டது கித்தார் மீன்கள். தோற்றத்தில் திருக்கை மீன்களின் வடிவத்தில் இருந்தாலும் மற்ற சாதாரண மீன்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மை உடையவை. நீளமான ஒரு கித்தார் இசைக்கருவி வடிவத்தில் உடலும், தட்டையான முன்புற தலையும், சிறிய இறக்கை போன்ற துடுப்புகளையும் உடையதாக இருக்கிறது. கடலுக்குள் பெரும் கூட்டங்களாக வாழும் இவற்றின் இடப்பெயர்ச்சிகள் குறித்து உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. கடலில் வெப்பம் அதிகமுள்ள பகுதிகளில் வேறுபட்ட சிற்றினங்களும் தென்படுகின்றன.

இம்மீன்கள் திருக்கை இன வகைப்பட்டியலில் சேர்ந்திருந்தாலும் சுறாவுக்கும் இதற்கும் பல தொடர்புகள் உண்டு. சுறாக்களைப் போன்றே வாலும், பக்கவாட்டு துடுப்புகளும் உடையதாகவும் இருக்கிறது. ஆனால் தலைப்பகுதியோ முக்கோணம் போல் அதாவது பொக்லைன் வடிவில் அமைந்திருக்கிறது. பல வண்ணங்களிலும் பல வடிவங்களிலும் காணப்படும் இம்மீன்களில் சிற்றினங்கள் பலவும் இருக்கின்றன. சுமார் 6 அடி வரை வளரக்கூடியது. இம்மீனின் ஈரலில் இருந்து எடுக்கப்படும் ஒருவகை எண்ணெய் சிறந்த மருத்துவ குணமுடையதாக இருப்பதால் அதன் விலையும் அதிகமாக இருக்கிறது.

கடலுக்கு அடியில் மணலிலும், சகதியிலும் புதைந்து கிடக்கும் சங்குகளும், சிப்பிகளும் தான் இவற்றின் விருப்ப உணவு. அவற்றை தோண்டி லாகவமாக எடுத்து, கடித்து தின்பதற்கு ஏற்றவாறு இம்மீனின் தாடைகள் கூர்மையாகவும் மணலை அள்ளும் சவுல் போலவும் அமைந்திருக்கின்றன. மணலைத் தோண்டி உணவுகளை எடுத்து உண்பதால் இந்த கித்தார் மீனுக்கு உழும் மீன் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

வசதிகள் நிறைந்த நவீன விசைப்படகுகளின் வரவும், புதுப்புது மீன்பிடி வலைகளின் அறிமுகமும் கடந்த 50 ஆண்டுகளில் மீன்பிடிக்கும் தொழிலை 4 மடங்கு அதிகரித்திருப்பதால் இந்த மீன்களின் எண்ணிக்கை கடலில் கூட்டம், கூட்டமாக காணப்பட்டாலும் ஓரளவு குறைந்து கொண்டே இருக்கிறது. இம்மீனின் அடிப்பகுதி வெண்மையாக இருப்பதால் கடலில் நீந்தும் போது கீழிருந்து பார்க்கும் மற்ற எதிரி மீன்களின் கண்களில் பட்டுவிடாமல் தப்பித்துக் கொள்ளும் புத்திசாலிகளாகவும் இருக்கின்றன'' என்றார்.

–சி.வ.சு. ஜெகஜோதி.



தினமலர்

### தோட்டக்கலைத் துறை சார்பில்உள்ளாட்சி பிரதிநிதிக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,03:08 IST

ராசிபுரம்: தேசிய மூலிகை பயிர் இயக்கத் திட்டத்தின் கீழ், தோட்டக்கலைத் துறை சார்பில், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பயிற்சி முகாம், ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.விழாவுக்கு, கலெக்டர் மதுமதி தலைமை வகித்து, விவசாயிகளுக்கான திட்டங்கள் குறித்தும், அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும், மூலிகை பயிர், மலர் சாகுபடி ஆகியவற்றை மேற்கொண்டால் கிடைக்கும் வருவாய் குறித்தும் விளக்கி பேசினார்.திருச்செங்கோடு தோட்டக்கலை அலுவலர் மாலதி, கிழங்கு பயிர்கள் சாகுபடி குறித்தும், படசோலை பண்ணை தோட்டக்கலை அலுவலர் சாந்திபிரியா மூலிகை பயிர்கள் சாகுபடி பற்றியும், எலச்சிபாளையம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி, பழப்பயிர்கள் மற்றும் காய்கறி சாகுபடி பற்றியும், சேந்தமங்கலம் தோட்டக்கலை அலுவலர் மஞ்சுளா, வாழை சாகுபடி முறை குறித்தும் எடுத்துக்கூறினர்.

முகாமில், விவசாயிகளுக்கு அடையாள அட்டையும், இடுபொருட்களும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், எம்.எல்.ஏ., பொன்னுசாமி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் தனகோபால், உதவி இயக்குனர்கள் மோகன் விஜயகுமார், சக்திவேல், முத்துராமன், ராஜேந்திரன், துணை அலுவலர் ராமசாமி, கோபால் மற்றும் விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

### வெங்காய குடோனில் வருமான வரி அதிகாரிகள் "ரெய்டு'

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,00:09 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி வெங்காய குடோனில் வருமானவரித்துறை அதிகாரிகள் ரெய்டு நடத்தி, ஆவணங்களை ஆய்வு செய்தனர். பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், கண்ணன் அன்கோ என்ற பெயரில் பெல்லாரி வெங்காயம் குடோன் உள்ளது. வெங்காய குடோனில் வருமான

வரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனை மேற்கொண்டனர். குடோன் உரிமையாளர் தண்டபாணியின் மொபைல்போன், அலுவலக போன்களை அதிகாரிகள் வசமாக்கிக்கொண்டனர். அங்கு கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டிருந்த ஆவணங்களை ஆய்வு செய்தனர். குடோன் உரிமையாளர், ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர்.

வெங்காய குடோன் உரிமையாளர் தண்டபாணி கூறுகையில், ""பொள்ளாச்சியில் 15 ஆண்டுகளாக பெல்லாரி வெங்காயம் விற்பனை செய்கிறேன். மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து மார்க்கெட்டிற்கு தினமும் 50 டன் பெல்லாரி வரத்து இருந்தது. பெல்லாரி வெங்காய் விலை உயர்வால் தற்போது தினமும் 20 டன் மட்டுமே வருகிறது. என்னுடைய கடைக்கு வந்த வெங்காய விபரம், இங்கிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்ட விபரங்கள் முறையாக பராமரிக்கப்படுகிறது. வருமான வரித்துறை அதிகாரிகள் காலை 11.00 மணி முதல் ஆவணங்களை ஆய்வு செய்து வருகின்றனர்'' என்றார்.

வருமான வரித்துறை அதிகாரிகள் கூறுகையில், "இந்தியா முழுவதும் வெங்காய வியாபாரிகள் குடோன்களில் ரெய்டு நடக்கிறது. வெங்காயம் இருப்பு, விற்பனை விபரங்கள், வர்த்தக பரிவர்த்தனை முறையாக உள்ளதா என்பதை ஆய்வு செய்து வருகிறோம். அந்த வகையில் பொள்ளாச்சியில் உள்ள வெங்காய குடோனிலும் ஆய்வு நடக்கிறது' என்றனர்.
பொள்ளாச்சி காந்திமார்க்கெட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் ரெய்டு நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. வெங்காய குடோன்கள் வெறிச்சோடி காணப்பட்டன. மார்க்கெட்டிற்கு மதியத்திற்கு மேல் வரும் கேரளா வியாபாரிகள் நேற்று வரவில்லை.

**லட்சம் மரக்கன்று நட "பசும் புலரி' திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,22:29 IST

கோவை : "பசும் புலரி' என்ற திட்டத்தின் கீழ், இந்தாண்டு கோவை மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன.
இதுகுறித்து, "சிறுதுளி', "ராக்' அமைப்புகள் அறிக்கை: நடப்பாண்டு சர்வதேச வன ஆண்டாக கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, சிறுதுளி, ராக் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்பில் "பசும் புலரி' என்ற திட்டத்தை துவக்கி ஒரு லட்சம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க திட்டமிட் டுள்ளன. மரக்கன்றுகளை பாதுகாத்து, பராமரிக்க பசுமை காப்பாளர், பசுமை கண்காணிப்பாளர், பசுமை கை மற்றும் பசுமை விரல் என நான்கு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு பசுமை காப்பாளர் 1000 மரங்களுக்கு பொறுப்பேற் பார். பசுமை கண்காணிப்பாளர் குழுவுடனும், ஒரு பசுமை கண்காணிப்பாளர் 100 மரங்களுக்கு பொறுப்பேற்று 10 பசுமை கை குழுவுடனும், ஒரு பசுமை கை அமைப்பாளர் பத்து மரங்களுக்கு பொறுப்பேற்று பசுமை விரல் குழுவுடனும், ஒரு பசுமை விரல் அமைப்பாளர் ஒரு மரத்தை நட்டு அன்றாடம் அதை பேணி காக்கும் வகையில் செயல்படுவார்.

இக்குழுவின் செயல்பாடுகள் குறித்த கையேடு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும். அதில், மரத்தின் பெயர், நடும் இடம், மரக்கன்றின் வளர்ச்சி, தண்ணீர் மற்றும் உரமிட்டு பராமரிக்கும் தகவல்கள் பதிவு செய்யப்படும். பசும் புலரி திட்ட துவக்க விழா நாளை காலை 9.00 மணிக்கு கோவை, அவிநாசி ரோட்டில் உள்ள பி.ஆர்.எஸ்., மைதானத்தில் நடக்கிறது. முன்னதாக காலை 8.00 மணிக்கு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், ஆர்.ஏ.எப்., மற்றும் சி.ஆர்.பி. எப்., அதிகாரிகள் பங்கேற்கும் ஊர்வலம் வ.உ.சி., பூங்காவில் இருந்து பி.ஆர்.எஸ்., மைதானம் வரை நடக்கிறது. ஊர்வலம் முடிவில், மாநகர போலீஸ் கமிஷனர் சைலேந்திரபாபு திட்டத்தை துவக்கி வைக்கிறார்.விபரங்களுக்கு, தீதீதீ.ஞ்ணூஞுஞுண
ஞிணிடிட்ஞுச்tணிணூஞு.ஞிணிட் என்ற இணையதளத்திலோ அல்லது 0422 - 424 1830 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வகை வகையாக காய்கறிகள் : அமெரிக்க மாணவர்கள் வியப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 07,2011,22:28 IST

கோவை : சர்வதேச ஊரக வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்படி கோவை வேளாண் பல் கலை வந்துள்ள அமெரிக்காவின் கார்னல் பல்கலை மாணவ மாணவியர், ஆர்.எஸ். புரம் உழவர் சந்தையின் செயல்பாடுகளையும் காய்கறிகளின் பல்வேறு வகைகளையும் கண்டு பிரமித்தனர். கோவை வேளாண் பல்கலை மற்றும் அமெரிக்காவில் உள்ள கார்னல் பல்கலை இடையே இரட்டை பட்டப் படிப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ஊரக வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்படி, வளரும் நாடுகளுடன் இது போன்ற ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுகிறது. இரு பல்கலை மாணவ மாணவியரும் இரு நாடுகளில் உள்ள பல்கலைகளில் தங்கியிருந்து வேளாண் படிப்பை முடித்து இரட்டை பட்டம் பெறலாம்.

கார்னல் பல்கலையில் இரண்டு மாதம் தங்கி படித்த கோவை வேளாண் பல்கலை மாணவ மாணவியர், கோவை திரும்பி விட்டனர். அடுத்த கட்டமாக கார்னல் பல்கலையில் படிக்கும்

பல்வேறு நாடுகளை சேர்ந்த 62 மாணவ மாணவியர் இந்தியா வந்துள்ளனர். கோவை வேளாண் பல்கலை ஆராய்ச்சி நிலையங்கள், வயல் வெளிகள், வகுப்பறைகளை மாணவ மாணவியர் பார்வையிட்டனர். நேற்று காலை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையை பார்வையிட்டனர். உழவர் சந்தை செயல்படும் விதம், போக்குவரத்து வசதி, விலை உள்ளிட்ட விபரங்களை நிர்வாக அலுவலர் திருப்பதி, கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி ஆகியோர் விளக்கினர். சந்தையில் குவிக்கப்பட்டிருந்த விதம் விதமான காய்கறிகளை கண்டு வியந்தனர். சில மாணவியர் பச்சை மிளகாயை கடித்துப் பார்த்து அதன் காரம் தாங்க முடியாமல் துடித்தனர். உழவர் சந்தை சார்பில் வழங்கப்பட்ட இளநீர், பப்பாளி பழம், வாழைப் பழங்களை சுவைத்தனர்.

கார்னல் பல்கலையில் எம்.டெக் புட் பிராசசிங் படிப்பை முடித்து வந்த கோவை வேளாண் பல்கலை மாணவன் அருண் விஸ்வநாதன் கூறுகையில், ""அமெரிக்காவில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் ஆர்கானிக் காய்கறி, பழங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இயற்கை முறையில் விளையும் இந்திய காய்கறிகள், கறி வேப்பிலை, மல்லி தழைகளில் உள்ள மணம் அங் குள்ள விளையும் காய்கறிகளில் இருப்பதில்லை. மரபணு மாற்றப்பட்ட காய்கள் அதிகளவில் கிடைப்பதால் அங்கு விளையும் பச்சை மிளகாயில் காரம் சிறிதளவே இருக்கும். இங்கு விளையும் மிளகாயை கடித்துப் பார்த்து மாணவியர் வியந்து விட்டனர்," என்றார்.

கார்னல் பல்கலை மாணவி செலஸ்டி மேரி பால்கான் என்பவர் கூறுகையில், ""இவ்வளவு வகையான காய்கறிகளை வாழ்க்கையில் இப்போதுதான் பார்க்கிறோம். பாகற்காய், புடலங்காய் அங்கு இல்லை. அமெரிக்காவிலும் இதே போன்ற சந்தை உண்டு. அங்கு கிடைக்கும் காய்கறிகளின் விலை அதிகம். வெங்காயத்தின் விலை தலை சுற்ற வைக்கிறது. அமெரிக்காவில் டின் உணவுகளே அதிகம். உழவர் சந்தையின் செயல்முறைகள் பிரமிக்க வைக்கின்றன," என்றார்.
அமெண்டா எனும் தாவர அறிவியல் மாணவி கூறுகையில், ""அமெரிக்காவில் வசதியானவர்கள் ஆர்கானிக் முறையில் விளைவிக்கப்படும் பழம், காய்கறிகளையே விரும்புகின்றனர். வால்மார்ட் போன்ற பெரிய நிறுவனங்கள் விற்கும் இப்பொருட்களின் விலை அதிகமாக இருந்தாலும் தரம் சிறந்ததாக இருக்கும். ஏழைகளால் அவற்றை வாங்க முடியாது.
வயல்களில் இருந்து டிரக், ரயில் மூலம் சந்தைக்கு காய்கறிகள் கொண்டு வரப்படுகின்றன. அங்கு விவசாயிகள் கட்டணம் செலுத்திதான் இப்பொருட்களை கொண்டு வர முடியும். இங்கு இலவசமாக கொண்டு வர அரசு உதவுவது பாராட்டத்தக்கது," என்றார்.

**ஜன., 21ல் கள் இறக்க முடிவுவிவசாயிகள் சங்கம் உறுதி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,00:08 IST

தாராபுரம் : "கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம்' சார்பில் மாநிலம் முழுவதும் வரும் 21ல் கள் இறக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் மாநில தலைவர் பழனிச்சாமி கூறியதாவது: கள் மீதான தடையை நீக்க வேண்டும் என வலியுறுத்தி, வரும் 21ல் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் கள் இறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.மத்திய அரசின் ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் தினமும் வேலையோடு கூலி கிடைப்பதால், மேற்கு மாவட்டங்களில் விவசாய வேலைக்கு ஆட்கள் வருவதில்லை. விவசாய நிலங்கள் பல வழிகளில் அழிந்து வருகின்றன. வீட்டுமனைகளாக மாறி வரும் பரிதாப நிலையில் உள்ளன. தமிழகத்தில் ஐந்து கோடி தென்னை மரங்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது 20 கோடி தென்னை மரங்கள் நடப்பட்டுள்ளன. சில ஆண்டுகளில் தென்னை விளைச்சலுக்கு வரும்போது தேங்காய் விலை மிகவும் சரிய துவங்கும். கள் இறக்க பயன்படுத்தும்போது விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும். இவ்வாறு, பழனிச்சாமி தெரிவித்தார்.

கொங்கு வேளாள கவுண்டர் பேரவை (கட்சி சார்ப்பற்றது) மாநில அமைப்பாளர் மணிகண்டன் வெளியிட்டுள்ள அறிக்கை: லோக்சபா தேர்தலின்போது, முதல்வர், கள் இறக்க அனுமதி அளிக்கப்படும் என வாக்குறுதி அளித்தார். ஆனால், தேர்தலுக்கு பின், நீதிபதி சிவசுப்ரமணியம் தலைமையில் கள் இறக்கு அனுமதி வழங்குவது குறித்து ஆராய கமிஷன் அமைக்கப்பட்டு, அக்கமிஷனின் அறிக்கை அரசுக்கு வழங்கப்பட்டும், இன்னும் அவ்வறிக்கை வெளியிடப்படவில்லை. எனவே, கள் இறக்கி விற்பனையை தீவிரப்படுத்தும் வகையில் கள் இயக்கம் சார்பில் ஜன., 21 முதல் போராட்டத்தை தீவிரப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இப்போராட்டத்தில் கட்சி சார்ப்பற்ற கொங்கு வேளாள கவுண்டர் பேரவை பங்கேற்கும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளிடம் மக்காசோள கொள்முதல் மோசடி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,02:39 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து மக்காசோளம் கொள்முதல் செய்தபோது எடை போடுவதில் மோசடி செய்து விவசாயிகளை ஏமாற்றிய வியாபாரிகள் இருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது' என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை பகுதியில் மக்காசோளம் கொள்முதல் செய்யும் வியாபாரிகள் விவசாயிகளிடம் எடை மற்றும் மூடைகளின்

எண்ணிக்கையில் மோசடி செய்வதாக மாவட்ட கலெக்டர் விஜயகுமாரிடம் இப்பகுதி விவசாயிகள் தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ராஜாசிதம்பரம் தலைமையில் புகார் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜராஜசோழன், வேளாண் துணை இயக்குநர் சிவக்குமார், வேப்பந்தட்டை தாசில்தார் ரவிக்குமார், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் பாஸ்கரன் ஆகியோரை கொண்ட குழுவினர் பூலாம்பாடி கிராமத்தில் திடீர் ஆய்வு செய்தனர்.ஆய்வின்போது, சேலம் மாவட்டம் கெங்கவல்லி தாலுகா லத்துவாடி கிராமத்தை சேர்ந்த லெட்சுமணன் மகன் குணசேகர் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் பூலாம்பாடி கிராமத்தை சேர்ந்த தர்மலிங்கம் மகன் பொன்னுசாமி ஆகிய 2 வியாபாரிகள் முத்திரை போடாத எடைகற்கள் மற்றும் எடைபோடும் போது கால் விரலால் எடை மிஷினை தூக்கிவிடுதல், மூடை எண்ணிக்கையில் மோசடி செய்தல் போன்றவற்றை கண்டறிந்தனர்.இதைத்தொடர்ந்து எடைகற்கள் மற்றும் எடைபோடும் மிஷின் பறிமுதல் செய்யப்பட்டது. குணசேகர் மற்றும் பொன்னுசாமி ஆகியோர் மீது தொழிலாளர் நலத்துறையினர் மூலம் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**பசுமைக் குடில் அமைக்க 50 சதவீத மானியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,23:54 IST

கொட்டாம்பட்டி:""கொட்டாம்பட்டியில் பசுமைக்குடில் அமைத்து சாகுபடி செய்யவிரும்பும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படும்," என தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரி கூறியுள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது:500 சதுர மீட்டரில் இரும்பு பைப்பால் பசுமைக்குடில் அமைக்க 4.67 லட்சம் ரூபாய் செலவாகும். இதில் 50 சதவீத பின் மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ஒரு நபருக்கு 1000 சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைக்குடில் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. உயர்ரக, வீரியஒட்டு காய்கறி பயிர்களையும், ஏற்றுமதிக்கான கொய்மலர்களையும் சாகுபடி செய்யலாம். இதன்மூலம் திறந்தவெளி சாகுபடியைவிட மூன்று மடங்கு கூடுதல் மகசூல் பெறலாம். மேலும் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம், என்றார். பயன்பெற விரும்புவோர் மேலும் விவரங்களுக்கு கொட்டாம்பட்டி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**ஆடு,மாடுகளை பாதுகாக்கவிவசாயிகளுக்கு ரெக்சின் ஷீட்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,20:49 IST

திண்டுக்கல்:கால்நடைகள் நனையாமல் காப்பதற்கு செட் அமைக்க தேவையான ரெக்சின் ஷீட்கள் அல்லது தார்பாய்கள் விவசாயிகளுக்கு அரசு வழங்கப்பட உள்ளது.கால்நடைகள் மழை காலத்தில் செட் இல்லாததால், மழையில் நனைந்த வண்ணம் இருக்கின்றன. இவ்வாறு நனையும் ஆடுகளுக்கு நீல நாக்கு நோயும், மாடுகளுக்கு கானை காய்ச்சல், ஆந்த்ராக்ஸ் நோய்களும் தாக்க கூடும். இவ்வாறு பாதிக்கப்படும் ஆடு, மாடுகள் இரை உண்ணாமல், நெடு நேரம் நின்ற வண்ணம் இருக்கும். நோய் தாக்கப்பட்ட ஆடு, மாடுகள் இறக்கும் போது, விவசாயிகளுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது.

மேலும் அரசுக்கும் இழப்பீடு தர வேண்டிய நிலை ஏற்படுகிறது. விவசாயிகள் தங்குவதற்கே சிரமப்படும் நிலையில் ஆடு, மாடுகள் நனையாமல் காப்பது முடியாத காரியமாகும். இதனால் ஆடு, மாடுகளை நனையாமல் காப்பதற்கு விவசாயிகள் கூரை அமைக்க ரெக்சின் ஷீட் அல்லது தார்பாய் அடங்கிய கிட் விரைவில் வழங்கப்பட உள்ளன.

கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கால்நடைகளை மழை நேரத்தில் வெளியில் கட்டக்கூடாது. இதை நனையாமல் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்கு வசதியற்ற விவசாயிகளுக்கு அரசு கூரை அமைத்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது. மேலும் நோய்கள் கால்நடைகளுக்கு தாக்கினால் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்கள், அரசு கால்நடை ஆஸ்பத்திரிகளுக்கு சென்று தடுப்பூசிகளை போட்டுக் கொள்ளலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**திண்டுக்கல் வெங்காய குடோனில்வருமான வரித்துறையினர் சோதனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,01:20 IST

திண்டுக்கல்:திண்டுக்கல் வெங்காய மண்டியில் வெங்காயம் பதுக்கல் மற்றும் விற்பனை குறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனை நடத்தினர். வெங்காய ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்து இருந்த போதும், உள்ளூர்களில் வெங்காயம் கிலோ 55 முதல் 60 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

வெங்காய வியாபாரிகள் கூட்டணி அமைத்து விலையை உயர்த்தி விற்கிறார்களா, அல்லது குடோன்களில் பதுக்கி வைத்துள்ளனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஆந்திரா வியாபாரிகளுக்கு அதிகளவு வெங்காயம் சப்ளை செய்த திண்டுக்கல் தாடிக்கொம்பு ரோட்டில் உள்ள வெங்கடசுப்ரமணியத்திற்கு சொந்தமான வெங்காய மண்டியில் நேற்று மதுரை வருமானத்துறை அதிகாரிகள் 5 பேர் திடீர் சோதனை நடத்தினர். இந்த மண்டியில் வெங்காயம்

எதுவும் பதுக்கல் இல்லை. மேலும், ஆந்திரா கம்பெனிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வெங்காயம் மற்றும் வரவு, செலவு கணக்குகளையும் ஆய்வு செய்தனர். இது குறித்து அவர்கள் கூறியதாவது: உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில், தமிழகத்தில் 33 இடங்களில் நாங்கள் சோதனை நடத்துகிறோம். இந்த கடையில் பதுக்கல் இல்லை. மாதம்தோறும் நடந்த வியாபாரம், வரவு, செலவுகளை நாங்கள் கணக்கெடுத்தோம். வேறு கருத்துக்களை நாங்கள் கூற முடியாது, என்றனர்.

**விளை பொருட்கள் திருட்டு: அதிர்ச்சியில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,21:30 IST

தேனி: தேனி மாவட்டம் முழுவதும் விவசாய மின்பம்ப் மோட்டார்களை திருடுவது, மின் வயர்களை அறுத்துச் செல்வது போன்ற திருட்டுக்கள் பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. சமீபகாலமாக விவசாய விளை பொருட்களும் திருடப்பட்டு வருகின்றன.திருட்டுக்கும்பல் விளைந்த தோட்டங்களில் உள்ள சாகுபடியினை திருடிச் சென்று விடுகின்றனர்.ஆண்டிபட்டி கே.கே. புரத்தில் உள்ள தோட்டத்தில் 500 கிலோவிற்கு அதிகமான மாங்காய்களை பறித்துச் சென்று விட்டனர். பல இடங்களில் தக்காளி, பீன்ஸ், அவரை, மொச்சை போன்றவற்றையும் திருடி விடுகின்றனர்.

குறிப்பாக பெண்கள் விவசாய விளை பொருட்களை திருடுவதில் ஈடுபடலாம் என விவசாயிகள் சந்தேகிக்கின்றனர். விவசாய விளை பொருட்களின் திருட்டு மதிப்பு சில ஆயிரம் ரூபாய்க்குள் இருப்பதால் புகார் கொடுக்க முன்வருவதில்லை. தேவதானப்பட்டி, ஜெயமங்கலம், ஆண்டிபட்டி, வருஷநாடு பகுதிகளில் விவசாய கிணறுகளில் மின்மோட்டார் திருட்டுக்கள் அதிகம் நடக்கிறது. இந்த திருட்டு சம்பவங்களால் விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

**கேரளாவிற்கு கால்நடை தீவனங்கள் கொண்டு செல்வதால் தேனி மாவட்டத்தில்பால் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,00:06 IST

போடி:தேனி மாவட்டத்திலிருந்து கேரளாவிற்கு கால்நடை தீவனங்கள் கொண்டு செல்வதால், கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படுவதுடன், பால் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மற்றும் கூலி தொழிலாளர்கள் விவசாயத்துடன் அதன் சார்பு தொழிலான கால்நடை வளர்ப்பு பணியிலும் ஈடுபட்டுவருகின்றனர். பால் மாடு வளர்ப்பு, மாட்டுக்கழிவுகளை உரத்திற்காக விற்பனை செய்து அதன் மூலம் ஏற்படும் வருவாயில் பலர் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.பச்சை தீவனமாக சோளம், மக்காச்சோளம்,

கம்பு, தட்டைகளை உணவுக்கு கொடுத்து வருகின்றனர். தற்போது மானவாரி பயிரான நிலக்கடலை விளைச்சலும் குறைந்ததுடன், பச்சை தீவனங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.தீவனங்களுக்காகவே சிலர் கோரை புற்களை பயிரிட்டு வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்தும் வருகின்றனர். விளை கொடுத்து வாங்க முடியாத விவசாயிகள் கால்நடைகளுக்கு தீவனத்திற்காக பல கி.மீ., தூரம் சைக்கிளில் சென்று மலையடிவாரப்பகுதியில் புல் அறுத்து கால்நடைகளுக்கு தீவனமாக கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தேனிமாவட்டத்தில் நெல் அறுவடை முடிந்து இருப்பு வைத்துள்ள விவசாயிகளிடம் வைக்கோலை கொள்முதல் செய்வதற்காக கேரளா வியாபாரிகள் களம் இறங்கியுள்ளனர். விலை கூடுதலாக கிடைக்கும் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் கேரள வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.இதனால் மாவட்டத்தில் கால்நடை தீவனங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால் உற்பத்தியை பெருக்க முடியாமல் பால் உற்பத்தியாளர்கள் மட்டுமின்றி விவசாயிகளும் பெரிதும் சிரமம் அடைந்து வருகின்றனர்.மாவட்டத்திலிருந்து கால்நடை தீவனங்களை கேரளாவிற்கு கொண்டு செல்லக்கூடாது என மாவட்ட நிர்வாகம் ஐந்து ஆண்டுக்கு முன்பு உத்தரவிட்டது. கடத்தலும் தவிர்க்கப்பட்டது. தற்போது மாவட்ட நிர்வாகம் கண்டு கொள்ளாமல் உள்ளதால் போடிமெட்டு, கம்பம் மெட்டு, குமுளி வழியாக லாரி, டிராக்டர்களில் வைக்கோலை கொண்டு செல்கின்றனர். தீவனங்கள் கேரளாவிற்கு கடத்தப்படுவதை தடுக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும்.

**விவசாயிகளுக்கு அடையாள அட்டை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,22:31 IST

கம்பம்:விவசாயிகளுக்கு ரேஷன் கார்டு போன்று அடையாள அட்டைகளை விவசாயத் துறை வழங்கி வருகிறது. இந்த அட்டையை பயன்படுத்தி விவசாயத்துறை வழங்கும் பல்வேறு சலுகைகளை பெற்றுக் கொள்ளலாம்.அத்தியாவசிய பொருள்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய ரேஷன் கார்டுகள் முதலில் பயன்பட்டது. பின்னர் படிப்படியாக அரசின் நலத்திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து பணிகளுக்கும் ரேஷன் கார்டுகள் பயன்படுத்தப்படுகிறது. அதேபோன்று விவசாயத்துறையில் தற்போது விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

அந்த அட்டையில் சம்பந்தப்பட்ட விவசாயின் படம் ஒட்டப்படுகிறது. நிலம், நஞ்சை, புஞ்சை, சர்வே எண், அளவு, மோட்டார் பம்ப் திறன், மின் இணைப்பு எண், பிறந்த தேதி, தொலைபேசி எண் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது.இந்த அடையாள அட்டையை பயன்படுத்தி, விவசாயத்துறையின் சார்பில் வழங்கப்படும் பல்வேறு மானியங்கள்

உள்ளிட்ட அரசின் உதவிகளை பெறலாம். இந்த அடையாள அட்டைகள் வழங்கும் பணியில் விவசாயத்துறையினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக கம்பம் உதவி இயக்குநர் (பொ) ராமராஜ் கூறுகையில் " கம்பம் வட்டாரத்தில் இதுவரை 300 விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கியுள்ளோம். தொடர்ந்து அடையாள அட்டை வழங்கும் பணி நடந்து வருகிறது. அடையாள அட்டையை பயன்படுத்தி எளிதாக விவசாயத்துறை வழங்கும் மானிய உதவிகளை பெறலாம்' இவ்வாறு கூறியுள்ளார்.

**திராட்சை ஆராய்ச்சி நிலைய இடம் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,21:28 IST

கம்பம்:திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் இடத்தை தேர்வு செய்யும் பணியில் மாவட்ட வருவாய் அதிகாரி ஈடுபட்டுள்ளார்.கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. திராட்சைக்கு கட்டுபடியான விலை கிடைக்கவில்லை. திராட்சையில் இருந்து ஒயின் தயாரிக்கும் தொழிற்சாலை இப்பகுதியில் துவங்கப்பட்டது. இருந்த போதும் இந்த பகுதியில் விளையும் திராட்சையில் இருந்து ஒயின் தயாரிக்க முடியாது என்று தெரிவித்து விட்டனர்.

எனவே ஒயின் தயாரிக்க தேவையான ரகம், ஏற்றுமதி ரகம் உள்ளிட்ட பல்வேறு ரகங்களை புதிதாக கண்டுபிடிக்கவும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை வழங்கவும் இப்பகுதியில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசிற்கு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். அதை ஏற்று கோவை விவசாய பல்கலைக்கழகம் சார்பில் கம்பம் பகுதியில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.இதற்கு தேவையான 25 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்யும் பணியில் மாவட்ட நிர்வாகம் தீவிரம் காட்டி வருகிறது.

தற்போது ராயப்பன்பட்டி சண்முகா நதிஅணை அருகே உள்ள 42 ஏக்கர் அரசு நிலத்தில் இருந்து, 25 ஏக்கர் நிலம் தர மாவட்ட நிர்வாகம் முன் வந்துள்ளது. இதற்கென இடத்தை ஆய்வு செய்யும் பணியில் மாவட்ட வருவாய் அதிகாரி பிருந்தாதேவி ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வின் முடிவில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்குரிய இடம் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் முறைப்படி இடத்தை கோவை விவசாய பல்கலைக்கழகத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

**குளிர்காலத்திலும் எலுமிச்சைகளுக்கு கிராக்கி:ஐயப்பன் கருணையில் களைகட்டும் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,23:07 IST

ராமநாதபுரம்:சபரிமலை சீசன் காரணமாக எலுமிச்சை பழங்களுக்கு ஏக கிராக்கி ஏற்பட்டுள்ளதால், குளிர்காலத்திலும் விற்பனை ஜோராக நடந்து வருகிறது.கோடையில் சூடுபிடிக்கும் எலுமிச்சை பழங்களின் விற்பனை, மழை மற்றும் குளிர்காலங்கள் குறைந்து விடும். சுவாமிக்கு எலுமிச்சை மாலைகள் போட்டு வணங்கும் முறை சமீப காலமாக அதிகரித்து வருகிறது.

தற்போது, வீட்டில் நடக்கும் பஜனைகளுக்கும், சபரிமலை செல்லும் வாகனத்திலும் எலுமிச்சை மாலைகள் இடம் பெறுகின்றன. இதனால், குளிர்காலத்தில் குறைந்து இருந்த எலுமிச்சை பழங்கள் விற்பனை, தற்போது சூடுபிடிக்க துவங்கியுள்ளது. ஒரு பழம் மூன்று முதல் ஐந்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. மாலையாக வாங்கும் போது, 80 ரூபாயிலிருந்து அதற்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது. ஐயப்ப சுவாமியின் கருணையால் களைகட்டி வரும் எலுமிச்சை விற்பனைக்கு, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் பகுதியின் தனியார் தோட்டங்களின் உரிமையாளர்கள் கை கொடுத்து வருகின்றனர்.

**துவங்கியது அறுவடை: அரிசி விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,20:59 IST

சிவகங்கை:அறுவடை துவங்கியுள்ளதால் அரிசி விலை குறையும் என வியாபாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.சிவகங்கையில் மளிகை பொருள் விலை (கிலோ) விபரம்:துவரம் பருப்பு-68; அதில் 2 வது ரகம் -65; தட்டப்பயறு-56; 2 வது ரகம் -48; கடலைப்பருப்பு- 38; 2 வது ரகம் -36; உளுந்தம் பருப்பு-76; 2 வது ரகம் -72.வெள்ளை கொண்டக்கடலை -62; அதில் சிவப்பு- 36; பாசிப்பருப்பு- 68; 2 வது ரகம் -65; பாசிப்பயறு-62; 2 வது ரகம் -58; மொச்சை பயறு-48; வெள்ளை மொச்சை- 67; பட்டாணி- 24; வெள்ளை பட்டாணி-22. மல்லி-49; 2 வது ரகம் -45; கடந்த வாரம் 60 க்கு விற்ற புளி- 70; நயம் புளி -80; பொரி கடலை -42; 45க்கு விற்ற வத்தல்- 60; 2 வது ரகம்-55; 220 க்கு விற்ற மலைப்பூண்டு -240; தரப்பூண்டு-140; 32 க்கு விற்ற வெல்லம் -36; கருப்பட்டி (வேம்பார்)-80; சர்க்கரை -33; சோம்பு-140; வெந்தயம் -52; கசகசா -280; சீரகம்-180; கடுகு-45; மிளகு -260; மஞ்சள் -180 ரூபாய்.அரிசி (கிலோ): கல்சர் பொன்னி-32; டீலக்ஸ் பொன்னி-28; ஐ.ஆர்.20 - 20; செல்லப்பொன்னி -22; பொன்னி பச்சரிசி -30; ஐ.ஆர்.20 பச்சரிசி- 21; இட்லி அரிசி-23; 22 க்கு விற்ற கோதுமை -24; சோளம் -16; கம்பு -18; 16 க்கு விற்ற கேப்பை -17; வரகரிசி -36 ரூபாய்.எண்ணெய்: கடந்த வாரம் 88 க்கு விற்ற கடலை எண்ணெய் -90; 53 க்கு விற்ற

பாமாயில் -58; 95 க்கு விற்ற நல்லெண்ணெய் -100; 95 க்கு விற்ற தேங்காய்எண்ணெய் -100 ரூபாய்.

**விவசாயிகள்ஊர்வலம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,00:51 IST

சிவகங்கை:கடந்த ஆண்டின் பயிர் காப்பீடு கணக்கெடுப்பில் குளறுபடியை போக்க வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், சிவகங்கையில் ஊர்வலம் நடந்தது. குணசேகரன் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். நிர்வாகிகள் முத்து, ஐயப்பன், ஆண்டியப்பன் பங்கேற்றனர். நிர்வாகி அழகர்சாமி நன்றி கூறினார்.

**உதவி வேளாண் அலுவலர் பணிக்கு பதிவுமூப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,00:46 IST

சிவகங்கை:உதவி வேளாண் அலுவலர் பணிக்கு, வேலைவாய்ப்பக பதிவு மூப்பு வெளியிடப்பட்டுள்ளது.தகுதி: பத்தாம் வகுப்பு தேர்ச்சி, இரண்டாண்டு தோட்டக்கலை டிப்ளமோ.வயது வரம்பு, 30.6.2010 அன்று, பகிரங்க போட்டியினருக்கு 35 க்குள். பிற வகுப்பினருக்கு வரம்பு இல்லை.பதிவுமூப்பு: முன்னுரிமை (இருபாலர்): அனைத்து வகுப்பை சேர்ந்த ஆதரவற்ற விதவை, கலப்பு திருமணம், ராணுவத்தில் பணிபுரிவோரை சார்ந்தவர், மாற்றுத்திறனாளிகள்- 19.10.2010 வரை.
முன்னுரிமையற்றவர்: அனைத்து வகுப்பு பெண்கள்; ஆதிதிராவிடர், மிக பிற்பட்டோர், பகிரங்க போட்டியை சார்ந்த ஆண்கள்- 12.1.2011 வரை.
தகுதி உள்ளோர் நேரில் வரவேண்டும் என, வேலைவாய்ப்பு அலுவலர் மனோகரன் தெரிவித்தார்.

**பண்டிகைகளால் பறக்குது பருப்புகள் விலை:மழையால் மலை போல உயர்ந்தது வத்தல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,22:51 IST

விருதுநகர்:பண்டிகைகளையொட்டி விருதுநகர் மார்க்கெட்டில் பருப்பு, பயறு வகைகள் மூடைக்கு 300லிருந்து 500 ரூபாய் வரை உயர்ந்துள்ளன. ஆந்திராவில் மிளகாய் விளைச்சல் மழையால் பாதிக்கப்பட்டதால், மூடைக்கு 500 ரூபாய் உயர்ந்துள்ளது.விருதுநகரில் கடந்த வாரம் சர்க்கரை விலை மூடைக்கு 3095லிருந்து 3,085 ரூபாயாக குறைந்தது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,200 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் 750லிருந்து 760 ஆகவும், பாமாயில் 950 ரூபாயாக மாற்றம் இல்லாமல் உள்ளது. எண்ணெய் விலை உயர்வதற்கு வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

நிலக்கடலைப் பருப்பு 3,600 ஆகவும், கடலைப் புண்ணாக்கு 2,600 ரூபாயாகவும் உள்ளது.நயம் உளுந்து விலை மூடைக்கு 4,500 லிருந்து 4,900 வரையும், சுமார் ரக உளுந்து 3,900லிருந்து 4,000 வரையும், பர்மா பருவட்டு உளுந்து 4,600 லிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6,000 லிருந்து 6,300 ஆகவும், பொடி உளுந்தம் பருப்பு 5,300 லிருந்து 5,500 ஆகவும், பர்மா பருவட்டு உளுந்தம் பருப்பு 5,900லிருந்து 6,000 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.துவரை 3,400 லிருந்து 4,000 ரூபாயாகவும், பொடி துவரை 3,000 லிருந்து 3,350 ஆகவும், துவரம் பருப்பு 5,600 லிருந்து 6,000 ஆகவும், பொடி துவரம் பருப்பு 4,700லிருந்து 5,100 ஆகவும் உயர்ந்துள்ளது. பாசிப்பயறு 4,700 ரூபாயிலிருந்து 4,900 வரையும், சுமார் ரகம் 3,500 லிருந்து 4,000 ஆகவும், பாசிப்பருப்பு 5,900 லிருந்து 6,300 ஆகவும், சுமார் ரகம் 5,500லிருந்து 5,900 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

கொண்டைக்கடலை 2,760 லிருந்து 2,750 ஆக குறைந்துள்ளது. பொரிகடலை 2,110லிருந்து 2,060 ரூபாயாக குறைந்துள்ளது.சம்பா மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு 3,500ரூபாயிலிருந்து 4,000 வரையும் சங்கரன்கோவில் வத்தல் 6,000லிருந்து 6,500 வரையும், முண்டு வத்தல் 5,000லிருந்து 5,500 ரூபாய் வரையும் உயர்ந்துள்ளது. புது சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,000 ரூபாயாகவும் உள்ளது. ஆந்திராவில் மழை காரணமாக மிளகாய் உற்பத்தி பாதித்திருப்பதால், மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு, குவிண்டாலுக்கு 500 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

**மானியத்தில் துல்லிய பண்ணையம் தோட்டக்கலை அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,01:49 IST

தென்காசி : "செங்கோட்டை வட்டாரத்தில் துல்லிய பண்ணையம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது' என தோட்டக்கலை துறை அதிகாரி விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து செங்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரத்தில் வாழை, காய்கறி பயிர்கள், மலர் பயிர்கள், மிளகாய் போன்ற பயிர்களில் உர பாசனத்துடன் கூடிய சொட்டு நீர் பாசனம் (துல்லிய பண்ணையம்) அமைக்க தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தோட்டக்கலை துறை மானிய உதவிகளை வழங்கி வருகிறது.

துல்லிய பண்ணையத்தினால் பல்வேறு பயன்கள் கிடைக்கிறது. நீரும், சத்துக்களும் வேரினில் கிடைக்கிறது. நீரை சிக்கனமாக பயன்படுத்தலாம். பாசனத்திற்கு தனியே ஆள் விட

தேவையில்லை. சத்துக்கள் நேரடியாக வேருக்கு கிடைப்பதால் அவை வீணாகாமல் பயிருக்கு கிடைக்கிறது. நீர் வேரை நேரடியாக சென்றடைவதால் இடையே களைகள் முளைப்பது குறைகிறது. களை எடுக்கும் செலவு பெருமளவு குறைகிறது. களைகளின் போட்டி இன்றி பயிர் வளர்வதால் மகசூல் அதிகரிக்கிறது.

முன்னதாகவே முதிர்ச்சிக்கு வருவதால் முன்கூட்டியே வருமானம் ஈட்டலாம். அடுத்த பயிர் சாகுபடியை முன்னதாகவே மேற்கொள்ளலாம். விளை பொருளின் தரம், எடை, பொலிவு அதிகரிப்பதால் நல்ல விலை கிடைக்கிறது. மொத்தத்தில் 30 முதல் 60 சதம் வரை மகசூல் அதிகரிக்கிறது.

இத்தகைய துல்லிய பண்ணையம் அமைக்க தோட்டக்கலை துறை தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 65 சத மானியமாக ஒரு எக்டேருக்கு பயிருக்கு ஏற்றவாறு 43 ஆயிரம் ரூபாய் முதல் 48 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. மேலும் எக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கரையும் ரசாயன உரங்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

செங்கோட்டை வட்டார வாழை, காய்கறிகள், மிளகாய், மலர் பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி உர பாசனத்துடன் கூடிய சொட்டு நீர் பாசனம் (துல்லிய பண்ணையம்) அமைத்து பயன்பெறலாம். இதுபற்றி மேலும் விபரம் அறிய செங்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என தோட்டக்கலை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**பாவூர்சத்திரம் பகுதியில் மஞ்சள்குலை விளைச்சல் அமோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,01:49 IST

பாவூர்சத்திரம் : பொங்கல் திருநாளை முன்னிட்டு பாவூர்சத்திரம் பகுதியில் மஞ்சள்குலை விளைந்த நிலையில் அறுவடைக்கு தயாராகி வருகிறது. தமிழர் திருநாளாம் தை பொங்கலில் கதிரவனுக்கு காய்கறி, கனிவகைகள் மற்றும் கரும்பு போன்றவைகள் படைக்கப்படும். இதில் முக்கிய இடம்பெற்றுள்ள மஞ்சள்குலை தற்போது பாவூர்சத்திரம் பகுதிகளான கீழப்பாவூர், மேலப்பாவூர், திருமலாபுரம், அரியப்பபுரம், சுரண்டை போன்ற பகுதிகளில் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன.

பயிரிடப்பட்ட சில மாதங்களில் நல்ல விளைச்சல் பெற்ற நிலையில் தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. பாவூர்சத்திரம் பகுதியில் கடந்த ஆண்டை விட இந்தாண்டு மஞ்சள் குலை பயிரிடுவதில் விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டவில்லை. இதனால் கடந்தாண்டு 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விற்கப்பட்ட மஞ்சள் குலைகள் இந்தாண்டு இதைவிட கூடுதலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தென்காசியில் மானியத்தில் வேளாண் இடு பொருட்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,01:46 IST

தென்காசி : தென்காசியில் மானியத்தில் வேளாண் இடு பொருட்கள் வழங்கப்பட்டன. தென்காசி வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களில் மானிய விலையில் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில் இலஞ்சி, குன்னக்குடி, கொட்டாகுளம், பண்பொழி பகுதிகளில் ராஜராஜன் 1000 செயல் விளக்க திடல்கள் அமைத்துள்ள விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கும் விழா தென்காசியில் நடந்தது.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் தலைமை வகித்து பயனாளிகளுக்கு இடுபொருட்களை வழங்கி பேசும் போது, ""அரசு மானியமாக வழங்கும் இடுபொருட்களை முறையாக பயன்படுத்தி 14 வயதுடைய இள நாற்றுகளை 25 செ.மீ. இடைவெளியில் சதுர முறையில் நடவு செய்து, கோனோவீடர் களை கருவி கொண்டு நட்ட 10, 20, 30 மற்றும் 40ம் நாட்களில் களையெடுத்து, காய்ச்சலும், பாயச்சலும் என்ற முறையில் நீர் பாய்ச்சி ராஜராஜன் 1000 சாகுபடி முறையை மேற்கொண்டால் அதிக நெல் மகசூல் பெறலாம்'' என்றார்.

ராஜராஜன் 1000 சாகுபடியில் சதுர முறை நடவிற்கு உதவிடும் மார்க்கர் கருவி, களை கருவியான கோனோவீடர், ரசாயண உரங்கள், பயிர் பாதுகாப்பிற்கு பயன்படும் வசம்புத்தூள் போன்றவை மானியமாக வழங்கப்பட்டன. கவுன்சிலர் ராமராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் ஜரிஷ்சேகர், வேளாண்மை அலுவலர் உதயகுமார், துணை வேளாண்மை அலுவலர் சேக் முகைதீன், உதவி விதை அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், சுப்புராம், உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், குமார், நாகராஜன், பரமசிவன், சபரிராஜா செய்திருந்தனர்.

**தெய்வச்செயல்புரத்தில் விவசாயிகள் சாலைமறியல் நடத்த முடிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 08,2011,00:46 IST

செய்துங்கநல்லூர் : மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பை முறைப்படி கணக்கெடுக்காததால் தெய்வச்செயல்புரத்தில் திடீர் மறியல் நடத்த இருப்பதாக தமிழ்நாடு விவசாய சங்கம் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் விவசாய சங்க துணை செயலாளர் மாரியப்பன் தெரிவித்துள்ளதாவது, கருங்குளம் பகுதிகளான ஆலந்தா, சவலாப்பேரி, சிங்கத்தாகுறிச்சி, காசிலிங்காபுரம், வடக்கு காரசேரி ஆகிய கிராமங்களில் பயிரிட்டிருந்த உளுந்து, பாசிப்பயறு ஆகியவை கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த பெரும் மழையினாலும், அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் சேதமடைந்துவிட்டது. இதனை கணக்கெடுத்து தமிழக அரசு தற்போது நிவாரணம் வழங்கிவருகிறது. இதையறிந்த விவசாயிகள் தங்களுக்கு பணம் கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால் கிடைக்கவில்லை. இது குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது கணக்கெடுப்பில் உள்ள வாக்குகளுக்கு மட்டும்தான் நிவாரணம் வழங்க முடியும் என தெரிவித்துள்ளனர். கணக்கெடுத்த விபரமே விவசாயிகளுக்கு இப்போதுதான் தெரிகிறது. கணக்கெடுப்பில் குளறுபடி உள்ளது. யாரை வைத்து கணக்கெடுத்தார்கள் என்று விவசாயிகளுக்கே தெரியவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பணம் கிடைக்கவில்லை. இது குறித்து கடந்த சில தினங்களுக்கு முன்பு ஸ்ரீவைகுண்டம் தாசில்தாரிடம் என் தலைமையில், சிங்கத்தாகுறிச்சி பஞ்.,தலைவி சின்னத்தாய், துணைத்தலைவர் ஜெயராமன், புதிய தமிழகம் இளைஞர்அணி செயலாளர் ஹென்றி, விவசாய சங்க ஒன்றிய துணைத்தலைவர் அழகர்சாமி, சிங்கத்தாக்குறிச்சி மகளிர் சுயஉதவிக்குழு தலைவி ராஜேஸ்வரி ஆகியோர் அடங்கிய போராட்ட குழுவினர் புகார் மனு கொடுத்துள்ளனர். அதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் வரும் திங்கள்கிழமை தெய்வச்செயல்புரத்தில் திடீர் பஸ்மறியல் செய்வோம். இவ்வாறு கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# கோவை உழவர் சந்தையில் அமெரிக்க பல்கலைக்கழக மாணவிகள் ஆள்உயர புடலங்காயை பார்த்து வியப்பு



கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் அமெரிக்க மாணவிகள் தக்காளியை தேர்வு செய்து வாங்குவதையும் புடலங்காய் குறித்து துணைவேந்தர் முருகேச பூபதி விளக்குவதை வியப்புடன் கேட்பதையும் படத்தில் காணலாம்.



அடேயப்பா, இளனியை எப்படிதான் அரிவாளால் சீவுகிறார்களோ என்று ஆச்சரியபடுகிறார்கள் இந்த அமெரிக்க மாணவிகள்.

கோவை, ஜன.8–

கோவையில் உள்ள உழவர் சந்தைக்கு வந்த அமெரிக்க பல்கலைக்கழக மாணவ–மாணவிகள் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்த ஆள்உயர புடலங்காயை பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

உழவர் சந்தை

அமெரிக்காவில் உள்ள கார்னெல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவ–மாணவிகள் 36 பேர் கல்வி சுற்றுலாவாக நேற்று முன்தினம் கோவை வந்தனர். இந்த மாணவர்கள் சர்வதேச வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சியை பாடமாக எடுத்து படித்து வருகிறார்கள். கோவை வந்த அமெரிக்க மாணவிகள் நேற்று ஆர்.எஸ்.புரம் கவுலிபிரவுன் ரோட்டில் உள்ள உழவர் சந்தைக்கு அழைத்து வரப்பட்டனர். உழவர் சந்தையில் நுகர்வோருக்கு விவசாயிகள் நேரடியாக காய்கறிகள் விற்பதை பார்த்து வியந்தனர்.

அப்போது உழவர் சந்தை செயல்படும் விதம், விற்கப்படும் காய்கறிகளால் நுகர்வோர் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் நேரடி பலன் ஆகியவை குறித்து மாணவர்களுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி விளக்கி கூறினார்.

காய்கறிகள்

அதை தொடர்ந்து உழவர் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்த காய்கறிகளான தக்காளி, கேரட், பீன்ஸ், வெண்டைக்காய், கத்தரிக்காய், பாகற்காய், அரசாணி, பூசணி, முருங்கைகாய் ஆகியவற்றை வியப்புடன் பார்த்து அதை தேர்வு செய்தனர்.

குறிப்பாக விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்த கோவக்காய், பீர்க்கங்காய், வெள்ளரிக்காய் ஆகிய காய்கறிகளை பார்த்து வியந்தனர். இது எங்கள் நாட்டில் கிடைப்பது இல்லையே என்று கேட்டு அவற்றின் பெயர் என்ன என்று கேட்டு தங்களது குறிப்பேடுகளில் குறித்து கொண்டனர்.

ஆள் உயர புடலங்காய்

உழவர் சந்தையில் விவசாயி ஒருவர் தனது தோட்டத்தில் விளைந்த ஆள் உயர புடலங்காயை விற்பனை செய்து கொண்டு இருந்தார். அதை பார்த்த மாணவிகள் அப்படியே ஒரு நிமிடம் அசந்து நின்றார்கள். இது என்ன, இதன் தாவரவியல் பெயர் என்ன என்று வேளாண் பல்கலைக்கழக அதிகாரிகளிடம் கேட்டனர். அதற்கு அதிகாரிகள் இது புடலங்காய் என்றும், அதன் தாவரவியல் பெயரை ஆங்கிலத்தில் விளக்கி கூறினார்கள். இப்படிப்பட்ட ஒரு காய்கறி இது வரை கண்ணில் கூட பார்த்தது

இல்லை, எங்களை விட இது உயரமாக இருக்கிறதே என்று பார்த்து வியந்து போனார்கள்.

அதன் பின்னர் உழவர் சந்தை முழுவதையும் சுற்றிப்பார்த்தனர். இதைத் தொடர்ந்து மாணவ–மாணவிகளுக்கு இளநீர் வெட்டி கொடுக்கப்பட்டது. சில மாணவிகள் வாழைப்பழம் உள்ளிட்ட பல்வேறு வகையான பழங்களை ரசித்து ருசித்து சாப்பிட்டனர். உழவர் சந்தை முழுவதையும் சுற்றிப்பார்த்த மாணவ–மாணவிகள் இது எங்களுக்கு ஒரு புதிய அனுபவம் என்று கூறினார்கள்.

இது குறித்து மாணவி ஜெசிகா கூறியதாவது:–

நேரடி விற்பனை

இந்த உழவர் சந்தையை பார்த்து நான் வியந்து போனேன். இங்கு விவசாயிகள் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை நேரடியாக கொண்டு வந்து நுகர்வோருக்கு விற்பனை செய்வது வியப்பாக இருக்கிறது. மேலும் நாள்தோறும் விளையும் புத்தம் புது காய்கறிகள் நேரடியாக விற்பனை ஆவது அதிசயமாக உள்ளது.

எங்கள் நாட்டிலும் சந்தைகள் செயல்படுகின்றன. இங்கு உள்ள விவசாயிகள் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலத்தில் விளையும் காய்கறிகளை நாள் தோறும் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். ஆனால் எங்கள் நாட்டில் விவசாயிகள் 500 ஏக்கர் மற்றும் 1000 ஏக்கர் என்று வைத்துள்ளனர்.

விளையும் காய்கறிகள் அங்கு உள்ள ர் சந்தைக்கு கொண்டு சென்று ஒட்டு மொத்தமாக விற்று விடுகின்றனர்.

நல்ல சத்துடன்.....

மேலும் இந்த காய்கறிகள் ஒரு மாத காலம் வரை குளிரூட்டப்பட்ட கிடங்கில் வைக்கப்பட்டு இருக்கும். இதனால் அதன் சத்து குறைந்து காணப்படும். ஆனால் இங்கு விற்பனை ஆகும் காய்கறிகள் நல்ல சத்துடன் தரத்துடன் விற்பனை ஆவது வியப்பாக உள்ளது. இவ்வாறு மாணவி ஜெசிகா கூறினார்.

கார்னெல் பல்கலைக்கழக மாணவ–மாணவிகளுடன் பேராசிரியர் கே.வி.ராமன், மூதறிவியல் பட்ட மேற்படிப்பு கல்வி முதல்வர் உதயசூரியன் மற்றும் வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உடன் இருந்தனர்.

**உற்பத்தி குறைந்து, விலை அதிகரிக்கும் நிலை தேயிலைத் துறை நிறுவன பங்குகள் விலை உயர வாய்ப்பு**



சைலேஷ் மேனன்
மும்பை
தேயிலை உற்பத்தி குறைந்து, விலை உயரும் என்பதால், அடுத்த சில மாதங்களில் இத்துறையைச் சேர்ந்த நிறுவனப் பங்குகள் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.
லாபம்
இது குறித்து ஜியோஜித் பீ.என்.பி. பரிபாஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் நிறுவனத்தின் தலைவர் (ஆய்வு) அலெக்ஸ் மாத்யூஸ் கூறும்போது, “உற்பத்தி குறைவால், தேயிலை விலை உயரும். இதனையடுத்து, அடுத்த சில காலாண்டுகளுக்கு இத்துறை நிறுவனங்கள் ஈட்டும் லாபம் சிறப்பான அளவில் அதிகரிக்கும்” என்று தெரிவித்தார்.
இதனையடுத்து, சென்ற டிசம்பர் மாதத்தில், இத்துறையைச் சேர்ந்த டன்கன் இண்டஸ்ட்ரீஸ், குட்ரிக் குரூப், ஹாரி சன்ஸ் மலையாளம், ஜூங்க்டோல் டீ உள்ளிட்ட நிறுவனங்களின் பங்குகளின் விலை 5 முதல் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இதே மாதத்தில் பீ.எஸ்.இ. மிட்கேப் குறியீட்டு எண் 2.5 சதவீதம் சரிவடைந்துள்ளது. இது, தேயிலைத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதில் முதலீட்டாளர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாண்டில் பெய்த கனமழையால் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது. தேயிலை உற்பத்தியில் நம் நாட்டில் முன்னிலை வகிக்கும் அசாம் மாநிலத்தில், பூச்சி தாக்குதலால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் நம் நாட்டில் 90.70 கோடி கிலோ தேயிலை உற்பத்தியாகியுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 1.4 சதவீதம் (92 கோடி கிலோ) குறைவாகும்.

ஏற்றுமதி

கடந்த மூன்று ஆண்டுகளாக நாட்டின் தேயிலை உற்பத்தி தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. கடந்த 2008–ஆம் ஆண்டில், உற்பத்தி 98.10 கோடி கிலோவாக இருந்தது. இது, 2009–ஆம் ஆண்டில் 97.90 கோடி கிலோவாகவும், சென்ற 2010–ஆம் ஆண்டில் 97 கோடி கிலோவாகவும் குறைந்துள்ளது.

உற்பத்தி சரிவடைந்து வரும் நிலையில், தேயிலை பயன்பாடு ஆண்டுக்கு 2.50 கோடி கிலோ என்ற அளவில் அதிகரித்து வருகிறது. நம் நாட்டிலிருந்து ஆண்டுக்கு 20 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதியாகிறது. 'பிளாக் டீ' எனப்படும் கருப்பு தேயிலை ஏற்றுமதியில் கென்யாவுக்கு அடுத்தபடியாக நம் நாடு உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆக, நம் நாட்டில் தேயிலை உற்பத்தி குறைவதால், சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் விலை உயர வாய்ப்புள்ளது.

தேயிலைக்கு அதிக விலை கிடைப்பதால், இத்துறையை சேர்ந்த நிறுவனங்களால் அதிக லாபம் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனவே, இத்துறையை சேர்ந்த நிறுவனப் பங்குகளின் விலை உயரும் என்று சில பங்கு வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தேயிலை விலை உயர்வால், நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில், இத்துறையைச் சேர்ந்த நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்பவர்களுக்கு இது ஊக்கமளிக்கும் செய்தியாகும்.

முதலீட்டாளர்கள் கவனத்திற்கு...

இந்நிலையில், சென்ற சில தினங்களாக நாட்டின் பங்கு வர்த்தகம் சற்று மோசமாக உள்ளது. இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில், பங்குச் சந்தை நிலவரம் எப்படி இருக்கும் என்பதை உறுதியாக கூறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, பங்குகளை வாங்க விரும்பும் முதலீட்டாளர்கள், நிறுவனங்களின் செயல்திறன் அடிப்படையில் முதலீடு செய்ய வேண்டும் என பங்கு வர்த்தக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பங்கு வர்த்தகத்தின் ஏற்ற, இறக்கத்தால், அதிக தாக்கத்திற்கு உள்ளாகாத மருந்து,

*நுகர்பொருள்கள், சிமெண்டு போன்ற துறைகளைச் சேர்ந்த நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்யலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*இந்நிலையில், நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்கம் அதிகரித்து வருவது மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால், மத்திய அரசின் மானியச் செலவினம் அதிகரிக்கும்.*

*அன்னிய நிதி நிறுவனங்கள்*

*சென்ற 2010–ஆம் ஆண்டில், அன்னிய நிதி நிறுவனங்கள், பங்குகளில் மேற்கொண்ட நிகர முதலீடு ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டி உள்ளது. இந்நிலையில், நடப்பு ஆண்டில், இந்நிறுவனங்கள் இந்த அளவிற்கு முதலீட்டை மேற்கொள்ளுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏனென்றால், அமெரிக்க பொருளாதாரம் வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீளத் தொடங்கி உள்ளது. எனவே, அன்னிய நிதி நிறுவனங்கள், அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளின் நிறுவனங்களின் பங்குகளிலும் முதலீட்டை மேற்கொள்ளும் என்ற கருத்தும் நிலவுகிறது.*

## பருத்தி மகசூல், மதிப்பீட்டை விஞ்சி அதிகரிக்க வாய்ப்பு ஏற்றுமதியால் உள்நாட்டில் பாதிப்பு?



*எஸ் சுஜாதா*

*கோயம்புத்தூர்*

*நடப்பு 2010–11 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நாட்டின் பருத்தி உற்பத்தி,*

*முந்தைய மதிப்பீடுகளை விஞ்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் 55 லட்சம் பொதிகளை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதித்துள்ளதால் உள்நாட்டில் அளிப்பு பாதிக்கப்படும் என சில அமைப்புகள் கருத்து தெரிவித்துள்ளன. இதுவரை 36 லட்சம் பொதிகள் ஏற்றுமதி ஆகியுள்ளதாக தெரிய வந்துள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியை கொண்டதாகும்.*

*ஜவுளி அமைச்சகம்*

*பருத்தி ஆலோசனைக் குழு அண்மையில், நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி முந்தைய மதிப்பீட்டை விட 4 லட்சம் பொதிகள் உயர்ந்து 3.29 கோடி பொதிகளாக உயரும் என தெரிவித்துள்ளது. மேலும் மத்திய ஜவுளி அமைச்சகம் வெளியிட்டுள்ள தற்போதைய புள்ளிவிவரத்தின் அடிப்படையில் ஜவுளி ஆலைகளில் பருத்தி பயன்பாடு, முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் 11 சதவீதம் அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது. கடந்த 2009–10 பருவத்தில் பருத்தி கையிருப்பு 40.50 லட்சம் பொதிகளாக இருந்தது. இது, நடப்பு பருவத்தின் முடிவில் 44.50 லட்சம் பொதிகளாக இருக்கும் என பருத்தி ஆலோசனைக் குழு மதிப்பிட்டுள்ளது. இது ஆலைகளின் இரண்டு மாத தேவையை பூர்த்தி செய்யும் வகையில்தான் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. எனினும் பருத்தி விலை உயரும் என்றோ, குறையும் என்றோ இக்குழு கூறவில்லை. 55 லட்சம் பொதிகளுடன் ஏற்றுமதி நிறுத்தப்பட்டால், பருத்தி விலை உள்நாட்டில் நிலையாக இருக்கும் என தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் தலைவர் ஜே.துளசிதரன் தெரிவித்தார்.*

*கடந்த பருவத்தில்...*

*கடந்த பருவத்தில், பருத்தி உற்பத்தி 2.95 கோடி பொதிகளாக இருந்தது. அப்பருவத்தில் 7 லட்சம் பொதிகள் இறக்குமதி செய்யப்பட்டன. நடப்பு பருவத்தில் 5 லட்சம் பொதிகள் இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே இரண்டு பருவங்களில், பருத்தி ஏற்றுமதி 83 லட்சம் பொதிகளிலிருந்து 55 லட்சம் பொதிகளாக சரிவடையும் என்ற நிலைப்பாடு உள்ளது. மேலும், பயன்பாடு (உள்நாடு + ஏற்றுமதி) 3.33 கோடி பொதிகளிலிருந்து 3.30 கோடி பொதிகளாக குறையும் நிலையும் உள்ளது.*